### விடியல் பயணத் திட்டம்! கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்! அரசுப் பணியில் 40 சதவிகிதம் மகளிர் இட ஒதுக்கீடு!

# அரசுப்பணி மகளிர்க்கு 12 மாதங்கள் மகப்பேறு விடுப்பு! தொழில் முனைவோராகும் மகளிர்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் வரலாறு போற்றும் மகளிர் திட்டங்கள்!

சென்னை, மார்ச் 8 -

**1917-ஆம் ஆண்டு ரஷ்யாவில் பெண்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து மார்ச் 8-ஆம் நாள் அங்கு மகளிர் உரிமைகள் காத்திடும் நோக்கில் மகளிர் தினம் கொண்டாடப் பட்டது.**

1975-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அவை மார்ச் 8-ஆம் நாள் ஆண்டுதோறும் சர்வதேச மகளிர் தினமாகக் கொண்டாடப்பட வேண்டும் எனப் பிரகடனப்படுத்தியது. அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு நாடுகளும் உலக மகளிர் தினத்தைக் கொண்டாடுகின்றன. தமிழ்நாடு உட்பட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களும் மகளிர் தினத்தை மகளிர் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் கொண்டாடுகின்றன. தமிழ்நாட்டைப் பொருத்தவரை மகளிர் உரிமைகளைக் காப்பதற்காக முதன்முதலில் 1921-இல் நீதிக்கட்சி அரசு பெண்களுக்கு வாக்குரிமை அளித்தது. அதனைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்தபொழுதெல்லாம் மகளிர்க்குக் காவல்துறையில் பணிகள், சொத்துரிமை, அரசு வேலைவாய்ப்பில் 30% இட ஒதுக்கீடு, மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொடங்கும் மகளிர் திட்டம் முதலியவற்றுடன் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு முதலில் 33% என்றும், பின்னர் 50% என்றும் இடஒதுக்கீடுகள் வழங்கப்பட்டு பெண்கள் சமூக, பொருளாதார நிலைகளில் விடுதலை பெற்று வளம்பெறத் தொடங்கினர்.

**திராவிட நாயகர் ஆட்சியில்**

தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021இல் ஆட்சிப் பொறுப்பேற்றபின் பெண்கள் சமுதாயம் மேலும் மேலும் முன்னேறுவதற்கான பல புரட்சிகரமான திட்டங்களை நடைமுறைப்படுத்தி இந்திய மாநிலங்களுக்கு மட்டுமல்லாமல், வெளிநாடுகளுக்கும் வழிகாட்டி வருகிறார்கள்.

அரசுப் பேருந்துகளில் மகளிர், மாணவியர், மாற்றுத் திறனாளிகளுக்குக் கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம், 1 கோடியே 15 இலட்சம் இல்லத்தரசிகளுக்கு மாதம் ரூ.1,000/- வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வியில் சேரும் 3 இலட்சத்து 28 ஆயிரம் மகளிர்க்கு மாதம் ரூ. 1,000/- வழங்கும் புதுமைப்பெண் திட்டம், பணிபுரியும் மகளிர்க்கு திருச்சி, கூடுவாஞ்சேரி, தாம்பரம், ஓசூர், திருவண்ணாமலை, பரங்கிமலை, சேலம், வேலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், விழுப்புரம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் 71 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதுகாப்பான தோழி விடுதிகள் திட்டம் உட்பட மகளிர் சமுதாய மேம்பாட்டிற்குப் புரட்சிகரமான புதிய பல திட்டங்களை அறிமுகப்படுத்தி நிறைவேற்றி வருகிறார்கள்.

**தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் பெண்களுக்கு உரிய அங்கீகாரம் சமூகநீதி, சமத்துவம், ஆகியவற்றை அளித்திடும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் “தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை” 2024-ஐ முதலமைச்சர் அவர்கள் புதிதாக உருவாக்கி கடந்த 21.2.2024 அன்று வெளியிட்டார்கள்.

**திருமண நிதியுதவித் திட்டத்தில் சாதனை**

பல்வேறு மகளிர் திருமண நிதியுதவித் திட்டங்களின்கீழ், இதுவரை 1 இலட்சத்து 26 ஆயிரத்து 637 மகளிர்க்கு 1,047 கோடி ரூபாய் திருமண நிதியுதவியாக வழங்கியுள்ளார்கள். இதில் 68 ஆயிரத்து 927 மகளிர்க்கு

8 கிராம் தங்க நாணயங்களுடன் நிதியுதவிகளும்; 57 ஆயிரத்து 710 மகளிர்க்கு நிதியுதவிகளும் வழங்கப்பட்டு மகத்தான சாதனை படைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

**மகளிர் சுய உதவிக்குழு கடன் ரத்து**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவு நிறுவ னங்கள் மூலம் வழங்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக் கடன்களில் 31.3.2021 அன்றைய தேதியில் நிலுவையில் இருந்த கடன்




தொகை ரூ.2,755.99 கோடி தள்ளுபடி செய்தார்கள். 1,17,617 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 15,88,309 மகளிர் பயன்பெற்றனர்.

**மகளிர் இடஒதுக்கீடு 40 சதவீதம்**

அரசுப் பணிகளில் மகளிர்க்கான இடஒதுக்கீடு 30 சதவீதம் என்பதை 40 சதவீதமாக உயர்த்தி மகளிர் பலர் அரசு அலுவலகங்களில் கூடுதல் வேலைவாய்ப்புகளைப் பெற்று வருகின்றனர்.

**மகப்பேறு விடுப்பு உயர்வு**

அரசுப் பணிகள் புரியும் மகளிர்க்கான மகப்பேறு விடுப்பு 9 மாதம் என்பது 12 மாதங்களாக 2021ஆம் ஆண்டு முதல் உயர்த்தியுள்ளார்கள்.

**மகளிர் சுய உதவிக்குழு கடன் உச்சவரம்பை உயர்த்தியுள்ள முதல்வர் !**

திராவிட நாயகர் அவர்களின் ஆட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடன் உச்சவரம்பு ரூ.12 இலட்சம் என்பது ரூ.20 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. 1,25,167 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.6,265.41 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**சத்துணவுத் திட்ட மகளிர் மேம்பாட்டில் திராவிட நாயகர்**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சத்துணவு மையங்களில் பணிபுரியும் சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்க்கான ஓய்வு வயதினை 58லிருந்து 60 ஆக உயர்த்தி, அவர்கள் வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படுத்தியுள்ளார்.

**கைம்பெண்களுக்காகக் குறைந்த வட்டியில் கடன்**

கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் நலனில் அக்கறை கொண்டு 13,003 மகளிர்க்கு 5 சதவீத வட்டியில் ரூ.35.35 கோடி கடன் வழங்கியுள்ளார்கள்.

**தொழில் முனைவோராக மகளிர்**

பெண்களைத் தொழில் முனை வோராக்கிடும் நோக்கில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் TANSEED (Tamil Nadu Startup Seed Grand Fund) திட்டம் வாயிலாக புத்தொழிலை ஊக்குவித்திட பெண் தொழில் முனைவோரின் புத்தொழில்களுக்கு 15 இலட்சம் ரூபாய் வரை மானிய நிதி வழங்குகிறார்கள்.

**பணிபுரியும் - மகளிர் தொழில் முனைவோர்க்குக் கடன்**

சமூக நீதியின் தாயகமான தமிழ்நாட்டில் சமூக நீதியை மேம்படுத்திடும் நோக்கில் 11,906 பணிபுரியும் பெண்களுக்கு ரூ.331.13 கோடியும், 32,338 மகளிர் தொழில் முனைவோருக்கு ரூ.191.23 கோடியும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**39 புதிய மகளிர் காவல் நிலையங்கள்**

பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க 39 புதிய மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பெண் காவலர்களுக்கு இலகுவான பணிகள் வழங்க ஆணையிட்டு வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு காவல்துறையில் மகளிர் காவலர்கள் இணைந்து 50 ஆண்டுகள் நிறைவுபெற்றதை யொட்டி நடைபெற்ற பொன் விழா நிகழ்ச்சியில் சிறப்பு தபால் உறை வெளியிடப்பட்டு, பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அவள் (AVAL - Avoid Violence Through Awareness and Learning) திட்டத்தை அறிமுகம் செய்துள்ளார்கள்.

**மகளிர்க்கு கலைஞர் கலைத்துறை வித்தகர் விருது - கலைஞர் எழுதுகோல் விருது**

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு மகளிர்க்கான கலைஞர் கலைத்துறை வித்தகர் சிறப்பு விருது பழம்பெரும் திரையுலகப் பின்னணிப் பாடகி திருமதி. பி.சுசீலா அவர்களுக்கும், அதேபோல, சிறந்த மகளிர் பத்திரிகையாளர் திருமதி.சுகிதா சாரங்கராஜ் அவர்களுக்குச் சிறப்பு விருதாக கலைஞர் எழுதுகோல் விருதும் வழங்கப்பட்டுள்ளன.

**அறநிலையத் துறையில் பெண் ஓதுவார்கள்**

திருக்கோவில்களில் 11 பேர் பெண் ஓதுவார்களாக நியமிக்கப்பட்டு மகளிர் சமுதாயம் போற்றப் பட்டுள்ளது.

**சிப்காட் வளாகங்களில் குழந்தைகள் காப்பகங்கள்**

தொழிற்சாலைகளில் வேலைக்குச் செல்லும் பெண்கள் மனக் கவலை தீர்க்கும் மாமருந்தாக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள 17 சிப்காட் தொழில் பூங்காக்களில் குழந்தைகள் காப்பகங்களைத் தொடங்கியுள்ளது. இந்த 17 தொழிற் பூங்காக்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள குழந்தைகள் காப்பகங்களில் ஏறத்தாழ 3 இலட்சத்து 23 ஆயிரம் தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறுகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இத்தகைய புதியபுதிய திட்டங்களை நிறைவேற்றி, தொடர்ந்து பல்வேறு வகையிலும் மகளிர்க்கான சலுகைகளை வழங்கி வருவதால், சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், மகளிர் சமுதாயம் அடைந்து வரும் முன்னேற்றங்கள் இந்தியாவிற்கே வழிகாட்டுகின்றன. இந்த வரலாற்று நிகழ்வுகளை நாளைய உலகம் போற்றும் என்பது திண்ணம்!

---

### இந்தித் திணிப்பு - நிதிப் பகிர்வில் பாரபட்சம் - தொகுதி சீரமைப்பில் அநீதி! திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

# ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம்!

## ஹஃபீசுல்லா, மதன்குமார் சிறப்புரை!

திருவண்ணாமலை, மார்ச், 8 -

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி சார்பில், இந்தித் திணிப்பு - நிதி பகிர்வில் பாரபட்சம் - தொகுதி சீரமைப்பில் அநீதி ஆகியவற்றிற்காக ஒன்றிய அரசை கண்டித்து. மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு கழக செய்தித் தொடர்பு துணை செயலாளர் எஸ்.ஏ. எஸ்.ஹஃபிசுல்லா, மா.மதன் குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நேற்று முன்தினம் (06.03.2025 - வியாழக் கிழமை) மாலை சரியாக 6.00மணிக்கு திருவண்ணாமலை, வேட்டவலம் சாலை, திருவள்ளுவர் சிலை அருகில், திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணியின், திருவண்ணா மலை சட்டமன்றத் தொகுதி சார்பில், இந்தி திணிப்பு - நிதி பகிர்வில் பாரபட்சம் - தொகுதி சீரமைப்பில் அநீதி ஆகியவற்றிற்காக ஒன்றிய அரசைக் கண்டித்து. மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளருமான சி.என்.அண்ணாதுரை தலைமை வகித்தார்.

நகரச் செயலாளர் ப. கார்த்திவேல்மாறன், ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர் சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதீஷ் குமார், டி.திலீப்குமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் க.இளவரசன், மு.கார்த்திக், செ.விஜய மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சு.ராஜாங்கம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

கண்டனப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, கழக செய்தித் தொடர்பு துணை செயலாளர் எஸ்.ஏ. எஸ்.ஹஃபிசுல்லா மற்றும் இளம்பேச்சாளர் மா.மதன் குமார் அவர்களும் சிறப்புரையாற்றினர்.

கண்டனப் பொதுக்கூட்டத்தில் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் க.பிரபு கஜேந்திரன்,

மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்ட துணை செயலாளர் மு.பெ. கிரி.எம்.எல்.ஏ., தலைமை செயற்குழு உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், எம்.எல்.ஏ., மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், துணை செயலாளர்கள் பிரியா விஜய ரங்கன், விஜய லட்சுமிரமேஷ். மாநில தொ.மு.ச. துணைத் தலைவர் க.சௌந்தர ராசன், செய்தித்தொடர்பு இணைச் செயலாளர் சிவ.ஜெயராஜ்,

மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ப.அண்ணாமலை, ஏ.ஏ.ஆறுமுகம், ஜெ.மெய் கண்டன், பொன்.தனுசு, சு.விஜி(எ) விஜயராஜ், எச்.சாதிக்பாட்சா, கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், பிரவீன் ஸ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார்காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், எல்.ஐ.சி.து.வேலு, கற்பகம்சரவணன், உ.நித்யா, தொ.மு.ச. இரா.ஆறுமுகம்,

ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு. பன்னீர் செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி,கு.பால சுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் ,

பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம்.சீனுவாசன், நகரமன்றதலைவர் நிர்மலா வேல்மாறன், பேரூராட்சி தலைவர்கள் கோ.சரவணன், கௌரி நடராஜ், செல்வபாரதிமனோஜ் குமார்,

நகர நிர்வாகிகள் சி.சண்முகம், மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ஜீவ ரேகாவிஜயராஜ், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, இல.குணசேகரன், அ.கண்ணன், கோல்டு.எஸ்.பிரபு, ஹக்கிம்சேட் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

நிறைவாக நகர இளைஞர் அணி அமைப்பாளர் மண்டி ஆ.பிரகாஷ் நன்றி கூறினார்.

முன்னதாக மாவட்ட தி.மு.க. அம்பேத்கர் கலைக் குழுவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.



இராணிப்பேட்டை மாவட்ட அலுவலகத்தில் இனமான பேராசிரியரின் 5 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது உருவ படத்திற்கு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். இதில் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் குமுதா குமார், நகர செயலாளர்கள் பி.பூங்காவனம், து.தில்லை, ஒன்றியச் செயலாளர் ஏ.வி.நந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ். வினோத், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வெங்கடேசன், மாவட்ட வர்த்தகரணி அமைப்பாளர் தியாகராஜன், தெங்கால் பத்மநாபன், பேரூர் செயலாளர் பெரியசாமி, மாவட்டப் பிரதிநிதி எம்.கிருஷ்ணன், நகர துணை செயலாளர் ஏர்டெல் குமார், நகர இளைஞர் அணி அமைப்பாளர் அஜ்மல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில்

# வேலூர் மாநகர தி.மு.க. சார்பில் பொதுமக்கள் 2072 பேருக்கு உணவு!

## மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. வழங்கினார்!

வேலூர், மார்ச் 8 -

வேலூர் மாநகர தி.மு.க. சார்பில் தமிழக முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழா முன்னிட்டு 2072 நபர்களுக்கு இனிப்புடன் கூடிய பிரியாணி வழங்கும் விழா நடந்தது.

வேலூர் மாநகர திமுக சார்பில் மாநகர கழக செயலாளர் வேலூர் சட்டப்பேரவை உறுப்பினர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., தலைமையில் 2072 நபர்களுக்கு இனிப்புடன் கூடிய பிரியாணியினை மாவட்ட கழக செயலாளர் ஏ.பி .நந்தகுமார் எம்.எல்.ஏ, தணிக்கை குழு உறுப்பினர் மாவட்டக் கழக அவை தலைவர் தி.அ.முகமது சகி ஆகியோர்வழங்கினர்.

இதில் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்த குமார் துணை மேயர் எம். சுனில் குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆர். பி. ஏழுமலை, மாநகர கழக நிர்வாகிகள் ஏ. ஆர். முன்னா செரிப், தங்க மணி ஆனந்தன், மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் வேலூர் ஜி. ரமேஷ், பகுதி கழகத்தின் செயலாளர்கள் என். பரம சிவம், ஆர். பி .இ. சசிகுமார், எம் ஏ கணேஷ் ஷங்கர் ,எஸ் தயாள் ராஜ், வி. ஜி. கே. சுந்தர விஜி, ஆர் சத்தியமூர்த்தி, ஜி பாலமுரளி கிருஷ்ணா, சி.எம். தங்கதுரை ஆர். கே. ஐயப்பன், தி.அ. முனவர் பாஷா பி. முருகப்பெருமாள், வேலூர் ஒன்றிய கழகச் செயலாளர் சி .எல். ஞான சேகரன், பொதுக்குழு உறுப்பினர் மா.ப .அன்புநிதி , மண்டல குழு தலைவர்கள் வீனஸ் ஆர். நரேந்திரன், கே. யூசுப் கான், மாவட்ட பிரதிநிதி வி. எஸ். எம். ஸ்ரீதர்,

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தேவ ராஜ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வி. எம். டி. ஏ. பாலாஜி , ப. சேட்டு வி. கே. கருணாநிதி, சரோஜா வெங்கடேசன், கோ சா சரவணன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் யூ. ரவிக்குமார்,

மாநகர தொண்டர் அணி அமைப்பாளர் என். எஸ். ரவி, மாநகர வர்த்தக அணி அமைப்பாளர் சீனிவாச காந்தி, மாநகர மாணவரணி அமைப்பாளர் ஆர் .அருண், சிறுபான்மை மாநகர அமைப்பாளர் அப்துல் காலப்பா என்ற மஜீத், மாநகர ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் எம். அந்தோணி, மாநகர கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ரமேஷ், மாநகர மீனவர் அணி அமைப்பாளர் உமா சந்திரன்,மாமன்ற உறுப்பினர்கள் வி. எஸ். முருகன், கா. சு. சண்முகம் ஜெய்சங்கர், டி திருப்பாவை, டிட்டா சரவணன், வட்ட கழக செயலாளர்கள் கே. ஆனந்த குமார், மயில்வாகனன், முனுசாமி, சுதாகர், குண சேகரன், பெருமாள், சண்முகம், டி. பாஸ்கர், வி. பி. முரளி கிருஷ்ணன், நீதி என்கின்ற அருணாச்சலம், மோகன் ஜெயபிரகாஷ் மற்றும் மாநகர அணிகளின் துணை அமைப்பாளர்கள் முரளி பாஸ்கர் ,விஜய், கருணாநிதி, எஸ் விஜயகுமார், பன்னீர் செல்வம் , சதீஷ், மணி கண்டன்,கே கோபிநாத், வி.டி. கோபிநாதன், மெடிக்கல் குமார்,துபாய் சீனு, உமாபதி, மணிகண்டன், மண்டி மணி, துரையரசன், ஐ.டி .விங் இர்ஃபான், விக்னேஸ்வரன், சண்முகம் ,பாலாஜி, குமார் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் என பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாநகர தி.மு.க. அலுவலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., தலைமையில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமாரர் 2072பேருக்கு பிரியாணி வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.